


நெல்லை மத்திய மாவட்ட முன்னாள் பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர், கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாநிலத் தலைவர் டி.பி.எம். மைதீன்கான் ஏற்பாட்டில் முன்னாள் மத்திய மாவட்ட கழக அலுவலக கலைஞர் கூட்ட அரங்கத்தில் மத நல்லிணக்க புனித ரமலானின் இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்வில் ஹழ்ரத் ஹாஜி.காஜா அபு சையது ஜிஸ்டி கலிபா உஸ்மானி, மாலைராஜா,விஜிலா சத்யானந்த், சுப.சீதாராமன்,ஏ.எல்.எஸ் லெட்சுமணன்,ஏர்வாடி சித்திக், கிரிஜா குமார்,தர்மன்,சு.சுப்ரமணியன், பி.எம். சரவணன், பரமசிவஜயப்பன், பா. அருண்குமார், முத்துராமலிங்கம் உள்ளிட்ட கழக முன்னணியினர் ஏராளமானோர் பங்கேற்றனர்.

### சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில்

# எத்தனால் தயாரிக்க சாத்தியக் கூறுகள் இல்லை!

## பேரவையில் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

**சென்னை, மார்ச் 21 - சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனால் தயாரிக்க சாத்தியக் கூறுகள் இல்லை என பேரவையில் வினா-விடை நேரத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.**



அதன் விபரம் வருமாறு:

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்:** மோகனூரர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் மரவள்ளிக் கிழங்கு மற்றும் அரிசியிலிருந்து எத்தனால் தயாரிக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள்.

இந்த மோகனூரர் வட்டத்தில் அமைந்துள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 2006-2011 ஆண்டில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த போது, துணை முதலமைச்சராக இருந்த, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொழில்துறை அமைச்சராக பொறுப்பேற்று, அந்தநேரத்தில் எத்தனால் ஆலை அமைப்பதற்கு ஆணை பிறப்பித்து, அது நிறுவப்பட்டது. இந்த எத்தனால் ஆலையிலே கரும்பிலிருந்து கிடைக்கக்கூடிய கழிவுப் பாகிலிருந்து எத்தனால் தயாரிக்கப்பட்டு வருகிறது. நம்முடைய உறுப்பினர் அவர்கள் மக்காச்சோளம், அரிசி மற்றும் மரவள்ளி கிழங்குமூலம் எத்தனால் தயாரிக்க ஆவன செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு எத்தனால் தயாரிக்கப்பட வேண்டுமென்றால், அதற்கு தனியாக இயந்திரங்கள் அமைக்க வேண்டிய நிலையிருக்கிறது. எனவே, அதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள், நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, எத்தனால் உற்பத்தி ஆலையினை மேம்படுத்துவதற்காக சுமார் ரூபாய் 6 கோடியே 67 இலட்சம் ரூபாயினை ஒதுக்கீடு செய்து, அந்தப் பணியினை மேற்கொள்வதற்கு உத்தரவு பிறப்பித்தார்கள். அதனடிப்படையிலே அந்த ஆலையை மேம்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது, மரவள்ளிக் கிழங்கு, அரிசி இவற்றிலிருந்து எத்தனால் தயாரிப்பதற்கு தனியாக இயந்திரத்தை அமைக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அதற்கான வாய்ப்பில்லை. எனவே, இந்தச் சூழ்நிலையில் கரும்பிலிருந்து கிடைக்கக்கூடிய கழிவுப் பாகிலிருந்து எத்தனால் தயாரிக்க இந்த ஆலையிலே வாய்ப்பிருக்கிறது.

சர்க்கரை கழிவுப் பாகிலிருந்து, *Molasses*-லிருந்து *Rectified spirit* என்கிற எரிசாராயம் தயாரிக்கப்படுகிறது. இந்த எரிசாராயத்திலிருந்து எத்தனால் அல்லது *Enriched Neutral Alcohol* தயாரிக்கப்படுகிறது. இதிலே முழுக்க கரும்பிலிருந்து நேரடியாக எத்தனால் தயாரிக்க வேண்டுமென்றால், கரும்பு உற்பத்தியிலிருந்து சர்க்கரை உற்பத்தி பாதிக்கப்படுகின்ற ஒரு நிலை ஏற்படும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும், பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலும் உற்பத்தியாகிற சர்க்கரையினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கி, அவற்றையெல்லாம் நியாயவிலைக் கடைகள்மூலம் குடும்ப அட்டைகளுக்கு வழங்குகின்ற நிலை இருக்கிறது. கரும்பு உற்பத்தி பரப்பு அதிகமாகிற போது, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, எதிர்காலத்தில் பரிசீலிக்க வாய்ப்பிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

### ஏழைகளுக்கு வழங்கும் மருந்தை வெளியில் விற்றுவிட்டு அலைக்கழிப்பவர்களை தண்டிப்பீர்!

# இருதய நோயாளிகளுக்கு மருந்தை தடையில்லாமல் வழங்க நடவடிக்கை எடுக்கவும்!

## புதுச்சேரி சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா வலியுறுத்தல்!

புதுவை, மார்ச் 21 -

புதுச்சேரி சட்டப்பேரவையில் பூஜ்ஜிய நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பேசியதாவது:-



NICOUMALONE - CG TROM1 இந்த மாத்திரை இதய நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த நான்கு மாதங்களாக இந்த மாத்திரையை யாருக்கும் கொடுக்காமல், மருந்தாளுநர்கள் அவர்களுக்கு தெரிந்தவர்களுக்கு மட்டும் கொடுத்து விட்டு, ஏழை நோயாளிகளை மருந்து இருப்பு இல்லை எனக்கூறி வெளியில் வாங்கிக் கொள்ளுங்கள் என்று திருப்பி அனுப்புகின்றனர். இந்த மாத்திரையை சாப்பிடவில்லை என்றால் மாரடைப்பு ஏற்பட்டு நோயாளிகள் உயிரிழக்கும் சூழல் உள்ளது. ஒரு வாரத்திற்கு இந்த மாத்திரையின் விலை ரூ. 600 ஆகும். ஏழை மக்களால் எப்படி சமாளிக்க முடியும். ஏழை மக்களை அதுவும் உயிர் காக்கும் மருந்தை வெளியில் விற்றுவிட்டு அப்பாவி ஏழை மக்களை அலைக்கழிக்க வைப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், மேற்கண்ட மருந்து இருதய நோயாளிகளுக்கு தடை இல்லாமல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெறி நாய்கள் மட்டும் பிடிப்பதற்கு சட்டம் இருக்கிறது. ஆனால் சமீபகாலமாக அதிகரித்துள்ள தெரு நாய்களை பிடிக்க நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து நிர்வாகம் தவறிவிட்டது. நீதிமன்ற உத்தரவு இருந்தாலும் கூட நாய்களால் பொதுமக்கள் பாதிக்காதவாறு நடவடிக்கை எடுப்பது அரசின் கடமை. கடந்த காலங்களில் தெரு நாய்களை பிடித்து கால்நடைத்துறை கருத்தடை செய்து வந்தது. ஆனால் நீதிமன்ற பிரச்சினை இருப்பதால் புதுச்சேரி மற்றும் உழவர்களை நகராட்சிகள் மத்திய பிராணிகள் நல வாரியத்திடம் அனுமதி பெற்று தெரு நாய்களுக்கு கருத்தடை செய்ய வேண்டும் என்ற நிலை உள்ளது. ஆனால் அதற்கான நடவடிக்கையை புதுச்சேரி அரசு ஏன் எடுக்கவில்லை என்று தெரியவில்லை. அதே போல் தெருநாய்களை மைக்ரோசிப் கருவி பொருத்தி கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுச்சேரியில் வளர்ப்பு நாய்கள் வைத்திருப்பவர்கள் சம்பந்தப்பட்ட நகராட்சியில் உரிமம் வாங்க வேண்டும். வெறிநாய் தடுப்பூசி போட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் அது கடைபிடிக்கப்படுகிறதா என்றால் கேள்விக்குறி தான். தமிழகத்தில் வளர்ப்பு நாய் வைத்திருப்பவர்கள் முகக்கவசம் அணியாமல் பொது வெளியில் அழைத்து வந்தால் ரூ. ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என்று அறிவிப்பு செய்துள்ளது. மேலும் ரேபிஸ் தடுப்பூசியை, மாநகராட்சியின் அனுமதியும் அவசியம் என்று உள்ளதை புதுச்சேரி அரசு கவனத்தில் கொண்டு இங்கும் அபராதம் விதிக்க வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா பேசினார்.



நாங்குநேரி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக 3வது வாரமாக தமிழக முதல்வர் தளபதியார் தலைமையிலான கழக ஆட்சியின் 4 ஆண்டு சாதனைகளை திண்ணை பிரச்சாரங்கள் வாயிலாக பொதுமக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கின்ற நிகழ்ச்சி ஒன்றிய செயலாளர் ஆர்.எஸ்.சுடலைகண்ணு தலைமையில் தெற்கு நாங்குநேரி ஊராட்சி பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களில் துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சகுந்தலா பாபு, புஷ்பா பாண்டி, வானமாமலை சங்கர், மாயகிருஷ்ணன், சங்கரபாண்டி, குமார், வர்கீஸ், பரமசிவம், ஜோ மற்றும் ஏராளமான பொதுமக்கள், தாய்மார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




சிவகங்கை மாவட்டம் காரைக்குடி 5 விளக்கு திடலில் ஒன்றிய அரசு தமிழகத்திற்கு நிதி நிலையில் வஞ்சிப்பதை கண்டித்தும் இந்தித் திணிக்கப்படுவதை கண்டித்தும் தொகுதி மறு சீரமைப்பை கண்டித்தும் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் சிறப்புரை ஆற்றினார். இதில் பெரியார், துரை சம்பத், இளம் கழக பேச்சாளர் ஜோஷி அபர்ணா, திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., த.சேங்கைமாறன், பரணிக்கீட்டு, கிங் கார்த்தி, ஆர். சேதுபதி ராஜா,கே.எம்.பொற்கோ, மகாவீர் மதிவாணன் ஆகியோர் உள்ளார்கள்.

### திருப்பத்தூர் மாவட்டம் – கொரட்டி காளத்தீஸ்வரர்

# கோவிலில் கண்டெடுக்கப்பட்ட ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்து அறிக்கை அளித்திடுவீர்!

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன சுவடியியல் துறைக்கு - அமைச்சர் பி.கே.சேகர்பாபு உத்தரவு!

சென்னை, மார்ச்.21-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திருப்பத்தூர் மாவட்டம் மற்றும் வட்டம், கொரட்டி, காளத்தீஸ்வரர் திருக்கோயிலில் கண்டெடுக்கப்பட்டு, தனி நபரால் பாதுகாக்கப்பட்டு தற்போது சுவாதீனம் பெறப்பட்ட ஓலைச் சுவடிகளை ஆய்வு செய்து அறிக்கை அளித்திட உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சுவடியியல் துறை முதுநிலை ஆராய்ச்சியாளர் முனைவர் சு. தாமரைப் பாண்டியன் தலைமையிலான குழுவினருக்கு உத்தரவிட்டார்.

நமது கலாச்சாரம், பண்பாடு மற்றும் தொன்மையின் அடையாளமாக திருக்கோயில்கள் திகழ்கின்றன. திருக்கோயில்களின் நிர்வாகம், மன்னர்கள் அளித்த கொடைகள், திருக்கோயில்களின் சொத்துகள் குறித்த விபரங்கள் போன்றவை காகித பயன்பாடு வருவதற்கு முன்பாக பனைவோலைகளே ஆவணங்களாக இருந்துள்ளன. இவ்விவரங்களை வருங்கால தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் தற்கால தமிழுக்கு மாற்றம் செய்து நூலாக்கம் செய்திட இந்து சமய அறநிலையத்துறையின் நிதியுதவியில் உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சுவடியியல் துறை பேராசிரியர் முனைவர் சு.தாமரைப்பாண்டியன் அவர்கள் தலைமையிலான வல்லுநர் குழுவினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இதுவரை 979 திருக்கோயில்களில் கள ஆய்வு செய்யப்பட்டு, 31 திருக்கோயில்களிலிருந்து 2,12,585 ஓலைச்சுவடிகள், 22 செப்பேடுகள், 67 செப்பு பட்டயங்கள், 2 வெள்ளி ஏடுகள், ஒரு தங்க ஏடு மற்றும் 365 இலக்கிய சுவடிகள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் 26,734 சுவடிகள் அறிவியல் முறைப்படி பராமரிக்கப்பட்டுள்ளதோடு, நூலாக்கம் செய்யும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், திருப்பத்தூர் மாவட்டம் மற்றும் வட்டம், கொரட்டி, காளத்தீஸ்வரர் கடந்த 2015ம் ஆண்டு நடைபெற்ற திருப்பணியின் போது இத்திருக்கோயிலின் இராஜகோபுரத்தில் இருந்த ஓலைச்சுவடிகள் கண்டுபிடிக்கப்பட்டு அப்போதைய ஸ்தபதியால் திருடப்பட்டுள்ளது. இவற்றை மீட்டு தனிநபர் ஒருவர் பாதுகாத்து வைத்திருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் திருப்பத்தூர் சரக ஆய்வாளரால் நேற்று முன்தினம் (18.03.2025) மாலை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, சுமார் 500 ஓலைகள் கொண்ட மூன்று ஓலைச்சுவடி கட்டுகளும், சுமார் 600 ஓலைகள் கொண்ட இரண்டு ஓலைச்சுவடி கட்டுகளும், புலி மற்றும் அரசன் உள்ள தனி ஓலை என ஆகமொத்தம் ஐந்து ஓலைச் சுவடி கட்டுகள் மற்றும் ஒரு ஓலை தனி ஓலை சுவாதீனம் பெறப்பட்டு திருக்கோயில் செயல் அலுவலர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, கண்டறியப்பட்ட ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்து அறிக்கை அளித்திட உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சுவடியியல் துறை முதுநிலை ஆராய்ச்சியாளர் முனைவர் சு.தாமரைப்பாண்டியன் தலைமையிலான வல்லுநர் குழுவினருக்கு உத்தரவிட்டார்.

### எஸ்.என்.ஆர்.உதயகுமார் தலைமையில் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசைக் கண்டித்து

# மரக்காணம் கிழக்கு ஒன்றியம் கூனிமேட்டில் பொதுக்கூட்டம்!

## செஞ்சி மஸ்தான் - அப்துல் மாலிக் - தமிழன் பிரசன்னா -ஷா நவாஷ் சிறப்புரை!

மரக்காணம் , மார்ச் 21 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாராபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதியை இழைக்கும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் மரக்காணம் ஒன்றியம் கூனிமேடு ஊராட்சியில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் மரக்காணம்கிழக்கு ஒன்றியம் கூனிமேட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களை நாட்டில் இருந்து வெளியேற்றிஇந்துத்துவா நாடாக கொண்டு வந்து பார்ப்பனர்களை ஆட்சி பெற வர்ணாஸ்ரத்தை நிலைநிறுத்தி நம் கல்வியை எல்லாம் அழித்து நம்மளை எல்லாம் அடிமையாக்குகின்றவகையில் ஒன்றிய பா.ஜ.க. மோடி அரசு செயல்பட்டு வருவதாக தலைமை கழக பேச்சாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா குற்றம் சாட்டினார்.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.என். ஆர். உதயகுமார் தலைமை தாங்கினார்.

மாவட்ட இளைஞரணி துணைஅமைப்பாளர்கள் எம்.டி பாபு, விஜயகுமார், அண்ணாமலை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் மரக்காணம் கிழக்கு ராஜசேகரன், மரக்காணம் மேற்கு சதீஷ், மரக்காணம் மத்தியம் சிவானந்தம், மரக்காணம் பேரூர் கார்த்திகேயன், ஒலக்கூர் கிழக்கு சண்முகம், திண்டிவனம் நகரம் சதீஷ் ஆகியோர் முன்னிலைவகித்தனர். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.கே.பி.ரமேஷ் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் தலைமைக் கழக இளம் பேச்சாளர் ஷாநவாஷ்,மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக், தலைமைக் கழக பேச்சாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க.அரசுக்கு எதிரான கண்டன உரை நிகழ்த்தினர்.

### திருவண்ணாமலை நகர தி.மு.க. சார்பில்

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 72வது பிறந்தநாள் விழா!

## கல்பாக்கம் ரேவதி குழுவினரின் மகளிர் இன்னிசை பட்டிமன்றம் நடைபெறவுள்ளது!

திருவண்ணாமலை, மார்ச் 21-

திருவண்ணாமலை நகர திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா நடைபெறவுள்ளது. விழாவில் கல்பாக்கம் ரேவதி குழுவினரின் மகளிர் இன்னிசை பட்டிமன்றம் நடைபெறவுள்ளது.

22.03.2025 சனிக்கிழமை மாலை சரியாக 6.00 மணிக்கு திருவண்ணாமலை, அண்ணா சிலை அருகில், திருவண்ணாமலை நகர தி.மு.க. சார்பில், கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மகளிர் இன்னிசை பட்டிமன்றம் நடைபெறவுள்ளது.

இன்னிசை பட்டிமன்றத்திற்கு நகர செயலாளர் ப. கார்த்திவேல்மாறன் அவர்கள் தலைமை வகிக்கிறார்.

மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், நகர நிர்வாகிகள் சி.சண்முகம், மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், குட்டி க. புகழேந்தி, இல.குணசேகரன், கோல்டு.எஸ்.பிரபு, ஹக்கீம்.சேட் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நகர பொருளாளர் ந. சீனுவாசன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

விழாவில் கலந்து கொண்டு மக்கள் முதல்வரின் திராவிட மாடல் ஆட்சி பெரிதும் துணைநிற்பது... மாநிலத்தின் வளர்ச்சிக்கா ? மகளிரின் மனமகிழ்ச்சிக்கா ? என்ற தலைப்பில் இன்னிசை பட்டிமன்றம் நடைபெறுகிறது.

கல்பாக்கம் ரேவதி அவர்கள் நடுவராக பொறுப்பேற்கிறார், மாநிலத்தின் வளர்ச்சிக்கே என்ற தலைப்பில் விஜய் டிவி புகழ் திருச்சி அன்னலட்சுமியும், கலைஞர் டிவி புகழ் மணப்பாறை லலிதாவும் வாதிடுகின்றனர். மகளிரின் மனமகிழ்ச்சிக்கே என்ற தலைப்பில் சன் டிவி புகழ் பேராவூரணி நீலவேணி அவர்களும், விஜய் டிவி புகழ் காரைக்கால் யோக தர்ஷினியும் வாதிடுகின்றனர்.

விழாவில் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன். முத்து, மாவட்ட துணை செயலாளர் மு.பெ.கிரி. எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் பெ.சு.தி.சரவணன்.எம்.எல்.ஏ., மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், துணை செயலாளர்கள் பிரியா விஜய ரங்கன், விஜயலட்சுமிரமேஷ். மாநில தொ.மு.ச. துணைத் தலைவர் க.சௌந்தர ராசன், செய்தித்தொடர்பு இணைச் செயலாளர் சிவ. ஜெயராஜ், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி. எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப. அண்ணாமலை, ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, சு.விஜி(எ) விஜயராஜ், எச். சாதிக்பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா. கார்த்திகேயன், டாக்டர். பிரவீன்ஸ்ரீதரன், சி.பி.பால முரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார்காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி. கே.ஏ.அருண், எல்.ஐ.சி. து.வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. இரா.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், ப.கேசவன், கோ. ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர். வி.சேகர், கி.ஆறுமுகம், பா. ராமஜெயம், த. செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பால சுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன்

பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம். சீனுவாசன், பேரூராட்சி தலைவர்கள் கோ. சரவணன், கௌரிநடராஜ், செல்வபாரதி மனோஜ்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம். ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.திலீப்குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

நிறைவாக மாவட்ட பிரதிநிதி அ.கண்ணன் நன்றி கூறுகிறார்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க சார்பில் 24வது வட்ட உறுப்பினர் ராஜா அங்கப்பன் ஏற்பாட்டில் டவுண் பாட்டப்பத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு தச்சை பகுதி செயலாளர் பூ. சுப்பிரமணியன் தலைமையில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று வழங்கினார்.நிகழ்வில் வேங்கை வெங்கடேஷ்,ஷெட்டி,சிவா,வைரமணி, இசக்கி முத்து,முத்து,மைக் மணி, சார்லஸ் முத்து ராஜ்,மகாராஜன், கணேச பெருமாள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.